**செய்தி வெளியீடு எண்: 246** **நாள்: 02.04.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று **(2.4.2012)** தலைமைச் செயலகத்தில், தமிழகத்தை தாக்கிய 'தானே' புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் திரு. ஜி. சொக்கலிங்கம் அவர்கள், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பணியாளர்களின் ஒரு நாள் சம்பளமான 77 லட்சத்து 27 ஆயிரத்து 181 ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது சட்டத்துறைச் செயலாளர் டாக்டர் ஜி. ஜெயச்சந்திரன் உடனிருந்தார்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 145 கோடியே 81 லட்சத்து 31 ஆயிரத்து 461 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 2.4.2012